தமிழ் இளையோர் அமைப்பு
Tamil Youth Organization

பொருள்: சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு
சுற்றுப்போட்டி அறிக்கை

சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பினரால் ***தியாகி பொன் சிவகுமாரனின்*** 38ம் ஆண்டு நினைவுகள் சுமந்த உள்ளரங்க உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று Sportanlage Hochweid, Kilchberg-Zürich உள்ளரங்க விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது. இச் சுற்றுப்போட்டியானது ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்குமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தொடக்க நிகழ்வாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம், மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. ஈகைச்சுடரினை இளையோர் அமைப்பின் துணைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். வணக்க நிகழ்வுகள் யாவும் நிறைவுற்றதும் சுற்றுப்போட்டி ஆரம்பமாகியது.

இச் சுற்றுப்போட்டிக்கு 22 கழகங்கள் விண்ணப்பித்திருந்தன. விண்ணப்பித்திருந்த கழகங்கள் அனைத்தும் பங்குபற்றியது இச் சுற்றுப்போட்டியின் சிறப்பான அம்சமாகும். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டிகளில் அரையிறுதிப்போட்டி வரை முன்னேறிய கழக வீரர்கள் மிகவும் சிறப்பாக தத்தமது ஆட்டத்திறனை வெளிப்படுத்தியிருந்தனர்.

**அரையிறுதியில்....**

Illam Siruthaikal Vs Swissboys: 4:0
Youngstar Vs SC Royal: 1:1 >>>>> 5:6

அரையிறுதியில் வெற்றி பெற்ற இரு கழகங்களான Royal விளையாட்டுக்கழகமும், Illam Siruthaikal விளையாட்டுக்கழகமும் இறுதிப்போட்டியில் விளையாட தகுதிபெற்றன. இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட இவ் வீரர்களுக்கு சுவிஸ் தமிழ் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் **திரு. திருக்குமார்** மற்றும் எமது உறுப்பினர்கள் கைலாகு கொடுத்து தங்கள் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்திருந்தார்கள். விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் நடைபெற்ற இறுதிப்போட்டியில் SC Royal Vs Illam Siruthaikal, 1 :0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றியீட்டி **தியாகி பொன் சிவகுமாரன்** அவர்கள் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டார்கள்.

***சிறந்த வீரர்:*** ***சுஜீவன் (9 Illam)- Siruthaikal***
***சிறந்த பந்துக்காப்பாளர்:*** ***சங்கர் (1) - SC Royal***
***இறுதிப்போட்டியின் சிறந்த வீரர்:*** ***பிரதீபன் (6) - SC Royal***

## பெண்களுக்கான உதைபந்தாட்டம்

***தியாகி பொன் சிவகுமாரன்*** நினைவாக நடாத்தப்பட்ட பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் 03 கழகங்கள் பதிவுசெய்த போதிலும் 02 கழகங்கள் மட்டுமே இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்தன. சிறப்பாக விளையாடி முதலாமிடத்தை Thaiman விளையாட்டுக்கழகமும் இரண்டாமிடத்தை Sunrise விளையாட்டுக்கழகமும் தமதாக்கிக் கொண்டன.

*சிறந்த வீராங்கனை:* *கவிசாளினி*- **Thaiman**
*சிறந்த பந்துக்காப்பாளர்:* *ரம்மியா*- **Sunrise**

அத்துடன் வெற்றிக்கிண்ணத்தையும் **Thaiman** விளையாட்டுக்கழகத்தினர் பெற்றுக்கொண்டனர்.

இச் சுற்றுப்போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்ய அனைத்து வகைகளிலும் முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து கழகங்களுக்கும், சம்மேளன உறுப்பினர்களான **திரு மனோகரன், திரு திருக்குமார், திரு முரளி** அவர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் பணிமனை உறுப்பினர்களுக்கும், இளம்றோயல் விளையாட்டுக்கழகப் பொறுப்பாளர் **திரு பாபு** ஆகியோர் உள்ளிட்ட அனைத்து எமது உறவுகளுக்கும் மனம் நிறைந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்ச்சியாக எம்மால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற இப்படியான நிகழ்வுகளுக்கு உங்களின் ஆலோசனைகளையும், நல் ஒத்துழைப்புக்களையும் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். பரிசளிப்பு நிகழ்வுகளுடன் மாலை 19:30 மணியளவில் சுற்றுப்போட்டி இனிதே நிறைவுபெற்றது.

நன்றி

சி. **சஞ்ஜீவன்**
துணைப்பொறுப்பாளர்
தமிழ் இளையோர் அமைப்பு
சுவிட்சர்லாந்து
07.03.2012